**04.02.2021 அ.வ.எண். 147/2011 பி.வா.சா.1 சம்பத் ஆச்சாரி**

**குறுக்கு விசாரணை**

வாதி எந்த சர்வே எண் மற்றும் எவ்வளவு விஸ்தீரணத்திற்காக நிலம் சம்மந்தமாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. நான் பட்டரை அமைத்துள்ள இடத்தில் அருகே உள்ள இடத்தில் வாதி பயிர் செய்து வருகிறார் என்றால் சரிதான். வாதியின் கணவர் பெயர் ரோஸ் ஆச்சாரி என்றும், அவரது தந்தையின் பெயர் கிஷ்டப்ப ஆச்சாரி என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் கிஷ்டப்ப ஆச்சாரிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. ரோஸ் ஆச்சாரியின் உடன்பிறந்த சகோதரர் வெள்ளை என்கிற பட்டாபி ஆச்சாரி என்றால் சரிதான். 2000ம் வருடம் ரோஸ் ஆச்சாரி மற்றும் அவரது சகோதரருக்கிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றும், அதன் அடிப்படையில் தாவா சொத்து ரோஸ் ஆச்சாரிக்கு பாத்தியப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினைபத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்து சம்மந்தமான பட்டா ரோஸ் ஆச்சாரி யின் பேரில் 2000ம் வருடம் மாற்றம் செய்யப்பட்டு அவர் அனுபவித்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 21.04.2011 அன்று தாவா சொத்தை வாதியின் கணவர் வாதிக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதன் அடிப்படையில் வாதியின் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டு அவர் இந்நாள் வரை அனுபவித்து வருகிறார் என்றால் அது பற்றி தெரியாது. வாதியின் கணவர் ரோஸ் ஆச்சாரிக்கு சொந்த ஊர் இரும்பேடு கிராமம். வாதியின் கணவர் ரோஸ் ஆச்சாரி என்பவர் அரசாங்கத்தில் பணி கிடைத்து செங்கல்பட்டு சென்று பணியின் காரணமாக அங்கு வசித்து வந்தார். நான் செங்கல்பட்டில்தான் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் அவ்வப்போது செங்கல்பட்டு சென்று தொழில் செய்து வருகிறேன். ச.எண். 137/2ஏ5 ல் உள்ள 5 ஏர்ஸ் நிலம் சம்மந்தமாக 20.08.1984 அன்று கிஷ்டப்ப ஆச்சாரி பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. பாகப்பிரிவினை அடிப்படையில் வாதியின் கணவருக்கு ஒதுக்கப்பட்ட பாகம் சம்மந்தமாக உட்பிரிவு செய்யப்பட்டு அவரது பாகத்திற்கு ச.எண். 137/2 ஏ5ஏ என புதிய ச.எண். வழங்கப்பட்டது என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 27.10.2011 தேதியிட்ட வாதியின் கணவர் பெயரில் மேற்சொன்ன சர்வே எண்ணில் உள்ள நிலம் சம்மந்தமாக வழங்கப்பட்ட சிட்டா நகலை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ச.எண். 137/2ஏ 5ல் மொத்த விஸ்தீரணம் 5 ஏர்ஸ் என்றும் அந்த நிலம் ஆதியில் கிஷ்டப்ப ஆச்சாரிக்கு பாத்தியப்பட்டது என்றும் பாகப்பிரிவினையில் வாதியின் கணவருக்கும் அவரது சகோதரருக்கும் சரிபாதி பாகம் ஒதுக்கப்பட்டது என்றும் அதனடிப்படையில் ச.எண். 137/2ஏ5ஏ ல் உள்ள 2 1/2 ஏர்ஸ் நிலம் வாதியின் கணவருக்கும் ச.எண். 137/2ஏ5பில் உள்ள 2 1/2 ஏக்கர் நிலம் அவரது சகோதரருக்கும் பாத்தியப்பட்டு இருந்து வ ருகிறது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் கிஷ்டப்ப ஆச்சாரி என்பவரிடமோ அவரது வாரிசுகளிமோ கிரையம் ஏதும் பெறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் நீதிமன்றத்தால் ஆணையர் நியமிக்கப்பட்டு அவர் தாவா சொத்தை பார்வையிட்டபோது நான் அங்கு இருந்தேன். வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா

சொத்தில் நான் ஆக்கிரமித்து பட்டறை கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் நான் தாவா சொத்தில் வ. தெ. 3.4 மீட்டர் கி.மே 9 மீட்டர் அளவுள்ள இடத்தை ஆக்கிரமித்து 14 அடி உயரத்தில் 23 அடி நீளத்தில் கட்டிடம் கட்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அது தவறு. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கைக்கு ஆட்சேபணை மனு நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த ஆட்சேபணை மனுவில் தாவா சொத்தை மறு ஆய்வு செய்ய உத்தரவிடுமாறு கோரியிருந்தேன் என்றும் அவ்வாறு மறு ஆய்வு செய்ய உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் நான் சர்வே எண். 137/2ஏ5ல் உள்ள 23 சென்ட் நிலத்தை கிரையம் பெற்றேன் என குறிப்பிட்டுள்ளேன் என்றும் நான் பதிலுரையில் குறிப்பிட்டுள்ள அதன் ஜக்பந்தி விவரங்கள் சரியானவையா என்றால் சரிதான். ச.எண். 137/2ஏ5ல் மொத்த விஸ்தீரணம் 12.35 சென்ட் நிலம் என்றும் ஆனால் நான் கிரையம் பெற்றது சம்மந்தமான கிரையப்பத்திரத்தில் ச.எண். 137/2ஏ5 மொத்த விஸ்தீரணம் 23 சென்ட் என தவறாக குறிப்பிட்டுள்ளது என்றால் அது தவறு. மேலும் அந்த கிரையப்பத்திரத்தில் தவறாக நான் கிரையம் பெற்ற 6 சென்ட் நிலத்தின் புதிய சர்வே எண். 137/15 என தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்த குப்பன் என்பவருக்கு சர்வே எண். 137/2ஏ5 ல் உள்ள நிலத்தில் எவ்வித உரிமையும் கிடையாது என்றும் எவ்வித உரிமையும் இன்றி அவர் எனக்கு ச.எண். 137/2ஏ5ல் உள்ள 6 சென்ட் நிலத்தை தவறாக கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்த குப்பன் என்பவருக்கு நான் கிரையம் பெற்ற சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அவர் அந்த சொத்தை கிரையம் பெற்றார். எனக்கு கிரையம் கொடுத்த சொத்து சம்மந்தமான குப்பன் என்பவர் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். குப்பன் என்பவர் அந்த சொத்தை அனுபவித்து வந்தது சம்மந்தமான பட்டா சிட்டா அடங்கல் போன்ற ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.5ல் நான் தாக்கல் செய்துள்ள கிரையப்பத்திரத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நடேச ஆச்சாரி என்பவர் என் தாத்தா ஆவார். பி.வா.சா.5ன் படி அவர் வேதாச்சல ஆச்சாரி மற்றும் கிஷ்டப்ப ஆசாரி என்பவர்களுக்கு ச.எண். 137/2ஏல் உள்ள 11 சென்ட் நிலத்தில் உள்ள 4ல் 1 பாகமான 2 3/4 நிலத்தை எனது தாத்தர் நடேச ஆச்சாரி கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வேதாச்சால ஆச்சாரி என்பவர் வாதியின் பெரியப்பா ஆவார். கிஷ்டப்ப ஆச்சாரி வாதியின் தந்தை என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது)